1973 பிப்ரவரி 7]

திருப்பூர் மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையம்

* 47 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் அரசினர் மருத்துவமனையில் "ரத்த சேமிப்பு நிலையம்" அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. துரைசாமி : நோயாளிக்கு உடனடியாக ரத்தம் தேவைப்பட்டால் 35 மைல் தூரத்தில் இருக்கும் கோவைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. திருப்பூர் நகரம் 1½ லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரம். அங்கு ஒரு ரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கு அடிப்படையான மருத்துவ மனையையே பெரிய அளவில் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அது கட்டி முடிக்கப்பட்ட பிறகு அதிலே இதுவும் இணைக்கப்படும். இப்போது தனியாக அமைக்க வேண்டுமென்பது பொருத்தமாக இல்லை.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்த ரத்த சேமிப்பு நிலையத்தை எல்லா வட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் ஆண்டுக்கு மூன்று, ஐந்து என்ற வீதத்தில் ஏற்படுத்த திட்டம் வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் திட்டம் இப்போதே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஓராண்டில் பத்து பன்னிரண்டு வட்ட மருத்துவ மனைகளில் தொடங்கப்பட வேண்டுமென்பது திட்டம். அதற்கான கட்டடம் இருக்க வேண்டும். கருவிகள் அமைக்க வேண்டும். பொதுமக்களும் குருதியைக் கொடுக்க ஆர்வம் உடையவர்களாக அமையவேண்டும்.